


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 158 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 2.94 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கண்ணன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் ஆகியோர் தலைமையில் தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்!

## மாணவ – மாணவிகளுக்கு நலஉதவிகள் வழங்கினார்!

விழுப்புரம், நவ.7 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 5.11.2024 அன்று விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.

விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சி கல்லூரி வளாகத்தில், விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி உண்டு, உறைவிட பள்ளி செயல்பட்டு வருகின்றது.

பள்ளி தகவல் தொகுப்பு மேலாண்மை அமைப்பின் (எமிஸ்) மூலமாக பெறப்பட்ட தகவல்களில், மாணவ, மாணவிகளின் கல்வித் தகுதிகளின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் இருந்து அரசு பள்ளிகளைச் சேர்ந்த சிறந்த மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் ஐ.ஐ.டி, மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் பயில பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு பள்ளி வளாகத்திலேயே விடுதி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வரும் இப்பள்ளியில் மொத்தம் 287 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். உண்டு உறைவிட வசதியுடன் செயல்பட்டு வரும் இப்பள்ளியில் 181 மாணவ, மாணவியர்கள் 11 மற்றும் 12ம் வகுப்பு பயின்று வருகின்றார்கள்.

இப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்ட துணை முதலமைச்சர் அவர்கள் வருகை பதிவேட்டினை பார்வையிட்டு தங்கியுள்ள மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையை சரி பார்த்தார். மேலும் விடுதியின், சமையற்கூடம், மாணவ, மாணவியர்கள் தங்குமிடம் ஆகியவற்றை பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடி கற்றல் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதனடிப்படையில் மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கில அகராதி (English Dictionary) மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். மாணவ, மாணவியர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வசதிகளை பயன்படுத்தி, நாட்டின் தலை சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம் பெறும் வகையில் நன்கு கல்வி பயில வாழ்த்து தெரிவித்தார்.


மேலும் துணை முதலமைச்சர் அவர்கள், விடுதியில் குடிநீர் வசதி, சமையலறை, கழிப்பிட வசதிகளையும், பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி அமைப்பின் பதிவுகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உணவுப் பொருட்களின் இருப்பு குறித்தும், மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவு வகைகளின் விவரங்கள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது வனத்துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா. இலட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அஹமது, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சுருதஞ் ஜெய் நாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்பட ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் கோ.வி.செழியன் தலைமை! தஞ்சையில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை!







தஞ்சாவூர், நவ.7-

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ சிலை திறப்பு கலைஞர் நூலகம், முரசொலி செல்வம் படத்திறப்பு - தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தஞ்சை மத்தியம், வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்க கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சராக பொறுப்பேற்று முதல் முறையாக தஞ்சை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

தஞ்சாவூர் மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் இன்று (07.11.2024 வியாழக்கிழமை) காலை 09.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகன், கழகத்தின் போர்வாள் முரசொலியின் ஆசிரியர் மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவ படத்தினை திறந்துவைக்கிறார்.

பின்னர் 09.30 மணியளவில் தஞ்சை இராமநாதன் ரவுண்டான, நவநீதகிருஷ்ணன் நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி அவர்களின் அலுவலகத்தை திறந்து வைக்கிறார்.

10.00 மணியளவில் தஞ்சாவூர் மஹாராஜா மஹாலில் பூதலூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் கல்லணை செல்லக்கண்ணு (எ) அரங்கநாதன் அவர்களின் மகள் மரு.அ.காவியா - ஏ.கே.திலீபன் திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைக்கிறார்.

அதனை தொடர்ந்து 11.00 மணியளவில் திருவையாறு தெற்கு ஒன்றியத்தில், ஒன்றியக் கழகச் செயலாளர் கே.எம். கௌதமன் அவர்களின் ஏற்பாட்டில் கண்டியூரில் 75 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள கொடி கம்பத்தில், கழகக் கொடி யேற்றுகிறார். 11.30 மணிளயவில் கோனேரிராஜபுரத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையுடன் கூடிய கலைஞர் படிப்பகத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேற்று (06.11.2024 புதன்கிழமை) மாலை தஞ்சைக்கு வருகை தந்த கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் எழுச்சிமிகு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அருகில் மேலும் இதே போன்று இன்று துணை முதல்வர் அவர்கள் பங்கேற்றிடும் நிகழ்ச்சிகளில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் தஞ்சை மத்திய, வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்தை சேர்ந்தமுன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழகநிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் தவறாது கலந்துக் கொள்ள வேண்டுகிறோம்.

கழக தோழர்கள் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ள மாநகர, நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாட்டினை செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாண சுந்தரம் எம்.பி (தஞ்சை வடக்கு), துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ (தஞ்சை மத்தியம்), கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ (தஞ்சை தெற்கு) அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

# ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை குற்றப் பரம்பரையாகச் சித்தரிப்பதா?

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி. கண்டன அறிக்கை!



சென்னை, நவ. 7 -

**கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றியல், "ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை குற்றப் பரம்பரையாகச் சித்தரிப்பதா?" என கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

'பிராமண சமுகம் ஒடுக்கப்படுகிறது' என்ற பெயரில் சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது. ஊடகத்தின் கவனத்தை ஈர்க்க திராவிட இயக்கத் தலைவர்களை குறிப்பாக தந்தை பெரியார், முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்டவர்களை அந்த ஆர்ப்பாட்டத்தில் இழிவுபடுத்திப் பேசியிருக்கிறார்கள். 'பிராமணர்கள் பாதுகாப்பு வலியுறுத்தல்' என்ற போர்வையில் தி.மு.க. அரசுக்கு எதிராகக் களங்கத்தை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

**வெவ்வேறு வாழ்க்கை முறைகள்!**

பண்பாட்டு அடிப்படையில் விந்திய மலைக்கு வடக்கே ஒரு வாழ்க்கை முறையும், விந்திய மலைக்கு தெற்கே ஒரு வாழ்க்கை முறையும் இருந்தது என்ற வரலாறு ஏன் இவர்களுக்குத் தெரியவில்லை? வானவியல், கணிதம், கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகளில் பழந்தமிழர் சிறந்து விளங்கிக் கொண்டிருந்த காலத்தில், கி.மு. 3000 ஆம் ஆண்டில் மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் தங்கள் ஆடு, மாடுகளுக்கு மேய்ச்சல் இடம் தேடி கைபர் போலன் கணவாய் வழியே உள்ளே நுழைந்தனர். கொஞ்சக் காலத்தில் பிராமணர்கள் மதத் தலைமையைக் கைப்பற்றினார்கள்.

இவர்களின் மனுதர்மம் வடக்கே உள்ள வாழ்வியல் முறையை வகுத்துத் தந்தது. பிறப்பால் மக்கள் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்று பிரிக்கப்பட்டனர். கடவுளிடம் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் பிராமணர்கள் என்றும், அரசாளப் பிறந்தவர்கள் சத்திரியர்கள் என்றும், வணிகம் செய்யப் பிறந்தவர்கள் வைசியர்கள் என்றும் இந்த மூன்று தரப்பினருக்கும் சேவை செய்யப் பிறந்தவர்கள் சூத்திரர்கள் என்றும் மனுதர்மம் கூறுகிறது.

**தீண்டாமைக் கொடுமைகள்!**

அந்த மனுதர்மம் மூலம் பிராமணர்கள் மற்ற சமூகத்தினரை அடக்கி ஒடுக்கி கீழ்நிலைக்குத் தள்ளினார்கள். சூத்திரர்கள், உயர் சாதியினர் வாழும் பொதுத் தெருக்களில் நடக்க உரிமை மறுக்கப்பட்டது. கல்வி கற்கும் உரிமையும் பறிக்கப்பட்டது. கோயில்களின் உள்ளே சென்று வழிபடவும் உரிமை இல்லை. பொதுக் குளங்கள், கிணறுகளில் நீர் எடுக்கவும் உரிமை இல்லை என மனுதர்மம் பெயரில் தீண்டாமைக் கொடுமைகள் அரங்கேற்றப்பட்டன.

தமிழர்கள் சமத்துவ வாழ்வியல் முறையைக் கடைப்பிடித்தார்கள். வள்ளுவர் தனது குறளில், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என்று குறிப்பிடுகிறார். சங்க காலம் தொட்டு, ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டு வரை தமிழர்கள் சமத்துவ வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். ஆண், பெண் சமத்துவம் தமிழர் வாழ்வில் மேலோங்கியிருந்தது. ஆனால், பிராமணர்கள் கடவுளின் பெயரால் மற்றவர்களை உயர்ந்தவர்கள் என்று சொல்வதுதான் இன்றைய பிரச்னைக்கு காரணமாக விளங்குகிறது.

**சமூக பெருமையை நிலைநாட்டும் ஆர்ப்பாட்டம்!**

'மனிதராகப் பிறந்த அனைவரும் சமமானவர்களே' என்ற அறிவியல் உண்மைக்கு மாறாக தம்மை உயர் சாதியினராகக் காட்டிக் கொள்ளக் குறிப்பிட்ட வகுப்பினர் இப்போதும் முயன்று கொண்டிருக்கிறார்கள் என்பதன் வெளிப்பாடுதான் அவர்கள் நடத்தியிருக்கும் ஆர்ப்பாட்டம்.

அது பாதுகாப்பு வலியுறுத்தல் ஆர்ப்பாட்டம் அல்ல. தன் சமூக பெருமையை நிலைநாட்ட நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.

பிரதமர் மோடி ஆட்சியில் ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் செயலாளராக இருப்பவர்களின் 90 விழுக்காட்டுக்கும் மேலானோர் பிராமணர்கள். மற்ற பிரிவினர் இவர்களைக் காட்டிலும் தகுதி பெற்றவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு முக்கியத் துறைகளை நிர்வகிக்கும்

வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. அதுபோலவே, நீதியரசர்களில் மிகப் பெரும்பான்மையினர் உயர் ஜாதியினராக உள்ள நிலை பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்து வருவதை உயர் பொறுப்பில் உள்ளோரே சுட்டிக்காட்டும் நிலை உள்ளது..

தமிழ்நாடு அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டு முறையை சட்டப்படி நடைமுறைப்படுத்தி மனிதர்கள் யாராயினும் அவர்களுக்கு பாரபட்சம் காட்டாமல், கல்வித் தகுதிக்கு ஏற்ப பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தென்னகத்தில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் பிராமணர்கள் தங்களை உயர் சாதியினராகவும், மற்றவர்கள் தங்களைவிடத் தாழ்ந்தவர்களாகவும் எண்ணிச் செயல்படுவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

**கலைஞரின் முழக்கம்!**

இந்து மதத்தில் ஏறத்தாழ 90 சதவிகித மக்கள் பிற்படுத்தப்பட்ட வர்களாக பட்டியலினத்தவராகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில், 1916ஆம் ஆண்டு தொடங்கிய நீதிக்கட்சி, திமுக போன்ற திராவிட இயக்கங்கள் இந்த 90 சதவிகித மக்களின் சுயமரியாதைக்காகப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. திராவிட இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், தந்தை பெரியார் முன்னெடுத்து நடத்திய போராட்டங்களாலும் வேள்விகளாலும்தான் இன்றைக்கு ஒடுக்கப்பட்டவர்கள் முன்னேறி வந்து கொண்டிருக்கிறார்கள். அதனால்தான், "பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம். ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்" என முழக்கமிட்டார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

ஒடுக்கப்பட்டவர்கள் உயர்வுக்கு வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் அவர்கள் மீது இன்றைக்கும் களங்கத்தை வீசுகிறார்கள். "பிராமணர் அல்லாதார் பதவிகளுக்கு வந்தால் லஞ்சம் வாங்குவார்கள்" எனச் சொல்லி ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை மிக மோசமாக இழிவுபடுத்தியிருக்கிறார் முன்னாள் நடிகை கஸ்தூரி. டிவி விவாத நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய நடிகை கஸ்தூரி, 'திறமை அடிப்படையில் பிராமணர் அல்லாதார் பதவிகளுக்கு வந்ததால் லஞ்சம் வாங்குகின்றனர்' என்று பேசி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூகத்தினர் என ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் அனைவரையும் மிக மோசமானவர்களாகச் சித்தரிக்க முயன்றிருக்கிறார். பிராமணர் சமூகம் உயர்வானது என நிலைநிறுத்த, ஒடுக்கப்பட்ட சமூகத்தினரைக் 'குற்றப்பரம்பரை' என வர்ணம் அடித்திருக்கிறார்.

**ஊடக வெளிச்சம்!**

"தெலுங்கர்கள் அந்தப்புரத்துச் சேவகர்கள்" எனச் சர்ச்சை கருத்தைச் சொல்லிவிட்டு, "அப்படி சொல்லவில்லை" என வியாக்கியானம் பேசுகிறார். சினிமாவில் மார்க்கெட் போன பிறகு தன்னை நிலைநிறுத்திக் கொள்ள... ஊடக வெளிச்சம் தன் மீது விழ... அதன் மூலம் அரசியல் அங்கீகாரம் பெற... பிற சமுதாயத்துக்குப் பெண்களையும் அதிகாரிகளையும் கேவலமாகச் சித்தரிப்பதை அனுமதிக்கவே முடியாது. இது இன்னொரு ஆரிய ஆதிக்க உணர்வின் வெளிப்பாடு. அதனைத் திராவிட மாடல் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. ஆரியத்தை எப்போது தலைதூக்க விட மாட்டோம்.

தெலுங்கர்களை மட்டுமல்ல.. பெண்களையே கஸ்தூரி கேவலப்படுத்தியிருக்கிறார். 'அந்தப்புரத்து சேவகர்கள்' என்று ஒரு பெண்ணே பெண் இனத்தையே கேவலமாகச் சித்தரிப்பவர்களுக்கு மற்ற இனத்தைப் பற்றி என்ன கவலை இருக்கப் போகிறது? இந்து கோயில்களுக்குப் பெண்களை நேர்ந்து விடுவதைச் சட்டத்துக்குப் புறம்பானதாக அறிவித்து, தேவதாசி ஒழிப்புச் சட்டத்தைச் சென்னை மாகாண சட்டமன்றத்தில் 1947ல் நிறைவேற்றி தேவதாசிகளுக்குத் திருமணம் செய்யும் உரிமையைத் பெற்றுத் தந்த மண் தமிழ் நாடு. இங்கே ஆரியம் வெற்றி பெறாது.

'பட்டியலின மக்களுக்கு இருப்பதுபோல, பிராமணர்களைப் பாதுகாக்கச் சிறப்புச் சட்டம் இயற்ற வேண்டும்' என அந்த ஆர்ப்பாட்டத்தில் முழங்கியிருக்கிறார்கள். பட்டியலினத்தவரை மிகவும் கீழ் சாதியினராக நினைப்பவர்கள், அவர்களுக்கு இருப்பது போலவே சிறப்புச் சட்டம் வேண்டும் என்பதைக் கேட்டு சிரிக்கத்தான் தோன்றுகிறது. எல்லா சமூகத்தினரைப் போலவே பிராமண சமுகமும் எந்த பிரச்னையும் இல்லாமல் இங்கே வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஏதோ நாளும் அநீதி இழைக்கப்படுவதாகவும், அவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு ஒடுக்கப்படுவதாகவும்கூறி பொய்யான தோற்றத்தைக் கட்டமைக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்கிறார்கள்.

**அனைத்து உயர் அதிகாரிகள்!**

அரசுத் துறை உயர் பதவிகள் என்றாலும் தனியார்த் துறை பணிகள் என்றாலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளாக இருந்தாலும் அனைத்து உயர் அதிகாரங்களையும் அனுபவித்துக் கொண்டு, தங்களுக்கு பாதுகாப்பு இல்லை, ஒதுக்கி வைக்க முயற்சி நடக்கிறது என்றெல்லாம் கூப்பாடு போடுவது, பட்டியல் சமூக மக்களுக்கான சிறப்புச் சட்டங்களைக் கேலி செய்யும் முயற்சி.

அனைத்து சமூகத்தினரும் பாதுகாப்பாக வாழ்வதற்கோ, விரும்பிய தொழிலை நிம்மதியாக செய்வதற்கோ எந்தவொரு தடையும் தமிழ்நாட்டில் இல்லை என்பது நாடறிந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி அனைத்து சமூகத்தினரையும் அரவணைத்துச் செல்கிறது. சாதி மோதல்களோ மதக் கலவரமோ இல்லாமல், 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்துச் செல்கிறது. சமாதான சகவாழ்வு, சமத்துவ நல்லிணக்கம் என்ற அடிப்படையில் இயங்கி வருகிறது. சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வரும் தமிழ் மண்ணில் சமூக அமைதியைக் குலைக்க, ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் அவதூறு பிரசாரத்தை மேற்கொண்டு பீதியைக் கிளப்புவது உள் நோக்கம் கொண்டது.

பிராமண சமூகத்தினருக்கு எதிராக எந்த சிறு வன்முறையும் தமிழ்நாட்டில் கடந்த நான்காண்டுகளில் நடைபெறவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கான சட்டத்தை நீர்த்துப் போக வைப்பதற்காகவோ அல்லது தங்கள் சமூகம் மோசமாகப் பாதிக்கப்படுவது போல ஒரு தோற்றத்தை உருவாக்கவோ திட்டமிடுகி றார்கள் என்பது அப்பட்டமாகவே வெளிப்பட்டிருக்கிறது.

**கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்கள்!**

தி.மு.க.வின் ஐம்பெரும் முழக்கங்களிலேயே ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்; வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்றிருக்கிறது; அவற்றில் தி.மு.க. என்றும் உறுதியாக இருக்கிறது. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து அதனை நிறைவேற்றியும் வருகிறது. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை. திராவிட மாடல் ஆட்சியின் முதன்மையான இலக்கு 'அனைவருக்கும் அனைத்தும்; எல்லோருக்கும் வளர்ச்சி; எளியோருக்கும் ஏற்றம்' என்பதுதான். வாய்ப்புகளை உருவாக்கி, புறந்தள்ளப்பட்ட மக்களுக்கு அந்த வாய்ப்புகள் சென்றடையச் செய்யவே நாளும் பாடுபட்டு வருகிறது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு. வன்முறையிலோ வெறுப்பு அரசியலிலோ என்றைக்கும் நம்பிக்கையற்ற அரசு இது! வெறுப்பின் பெயரால் அரசியல் ஆதாயம் தேடவும் திராவிட மாடல் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்கவும் எடுக்கப்படும் முயற்சிகள் ஒருபோதும் இம்மண்ணில் வெற்றி பெறாது.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.